செ.வெ.எண்: 76 நாள்: 30.06.2016

# பத்திரிகைச்செய்தி

2016ம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் தேதி வியாழன் அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் முழு அமர்வு கூட்டம் நடைபெற்றது. அப்போது 1961 ஆம் ஆண்டைய வழக்கறிஞர்கள் சட்டத்தின் 34(1) பிரிவின் படி கொண்டுவரப்பட்டு 25.05.2016 அன்று அரசிதழில் வெளியிடப்பட்ட விதிகள் தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் R.K.Anand Vs Registrar, Delhi High Court என்ற தீர்ப்பிற்கிணங்க வழக்கறிஞர்கள் சட்டப்பிரிவு 34(1)ன் கீழ் இந்த விதிகள் கொண்டுவரப்பட்டது என்றும் இந்த விதிகள், வழக்கறிஞர்களின் பதிவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதற்கோ அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவோ ஏற்படுத்தப்பட்டதல்ல என்றும், இந்த விதிகள் நீதிமன்றத்தினுடைய மாண்பைக் காக்கவும், நீதி பரிபாலனம் முறையாக நடப்பதற்கு இடையூறாக உள்ள வழக்கறிஞர்களை அந்த குறிப்பிட்ட நீதிமன்றத்திலோ அல்லது பிற நீதிமன்றங்களிலோ வாதிடுவதிலிருந்து தவிர்க்கும் முகமாக ஏற்படுத்தப்பட்டன என்பது கருத்தில் கொள்ளப்பட்டது.

R.K.Anand Vs. Registrar, Delhi High Court என்ற தீர்ப்பில், உச்சநீதிமன்றம், இது போன்ற விதிகள், தீர்ப்பு வந்த நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் உருவாக்கப்படவேண்டும் என்று எல்லா

உயர்நீதிமன்றங்களுக்கும் உத்தரவிட்டது. இந்தப் பிரிவின்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய விதிகள் உருவாக்கப்படவில்லை என்றும் உடனடியாக விதிகள் உருவாக்கப்படவேண்டும் என்று உத்தரவிட ஒரு நீதிப்பேராணை மனு W.P.No.29185/2011 மூலமாக வழக்கு தொடரப்பட்டு இருந்தது. அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கிணங்க விதிகளை உருவாக்க, நீதியரசர்கள், அரசு தலைமை வழக்கறிஞர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சபை, (Bar Council of Tamil Nadu & Puducherry), சென்னை உயர்நீதிமன்றத்தைச் சார்ந்து இயங்கும் அனைத்து வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு கலந்து தீர ஆலோசித்து வரைவு விதிகளை உருவாக்கி அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து வழக்கறிஞர்கள் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோரின் ஒப்புதலோடு அதனைத் தலைமை நீதியரசருக்கு அனுப்பி வைத்தது. தலைமை நீதியரசர் அவர்கள் அந்த வரைவை அனைத்து நீதிமன்றங்களின் பார்வைக்கு வைத்து, பின்னர் நடைபெற்ற அனைத்து நீதியரசர்களின் முழு அமர்வில் பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு 25.05.2016 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.

அரசிதழில் இந்த விதிகள் வெளியிடப்பட்ட பின்னர், சில வழக்கறிஞர்கள் சங்கங்களும் வழக்கறிஞர்களும் அந்த விதிகளில் குறைபாடுள்ள சில ஷரத்துகள் குறித்து தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். வழக்கறிஞர்களின் சங்கப் பிரதிநிதிகள் தலைமை நீதியரசரை சந்தித்தபோது தலைமை நீதியரசர் அவர்கள், அவர்களுடைய குறைகளை எழுத்து வடிவில் கொடுக்குமாறும் அவற்றை மீண்டும் விதிகள் குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்து தக்க மாற்றங்களை உருவாக்கலாம் என்று எடுத்துக்கூறிய பிறகும் சில வழக்கறிஞர்களின் சங்கங்கள் இந்த விதிகள் தொடர்பாக தங்களின் எதிர்ப்புக்களை தொடர்ந்து எழுப்பியதையடுத்து தலைமை நீதியரசர் அவர்கள் இந்த விதிகளின் வரைவு முடியும் வரை நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளமாட்டோம் என்று உறுதியளித்தார். அதற்குப் பின்பு இன்று (16.06.2016 அன்று), இது குறித்து நீதியரசர்களின் முழு அமர்வில் ஆலோசிக்கப்பட்டது. இதில் ஏற்கனவே தலைமை நீதியரசர் அளித்த உறுதிமொழியை ஏற்றுக்கொள்வதோடு தற்போது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என்றும், ஆனால் வழக்கறிஞர்கள் நீதிமன்றப் பணிகளுக்குத் திரும்பவேண்டுமென்றும் அப்படி அவர்கள் நீதிமன்றப் பணிகளுக்குத் திரும்பாமல் தொடர்ந்து நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் நிலை ஏற்படும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இந்த முழு அமர்வில் எடுக்கப்பட்ட முடிவு ஏற்கனவே வழக்கறிஞர்கள் சபைத் தலைவர் மூலமாக வழக்கறிஞர்களுக்கும் வழக்கறிஞர்களின் சங்கங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கொண்டு நீதியரசர்களின் முழு அமர்வில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க விதிகள் குழு மாற்றியமைக்கப்பட்டு தற்போது ஐந்து நீதியரசர்களைக் கொண்ட புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர்களின் சங்கங்களும் வழக்கறிஞர்களும் இரண்டு வார காலத்திற்குள் தங்கள் கருத்துக்களையும் எதிர்ப்புக்களையும் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளதற்கிணங்க ஒருசில வழக்கறிஞர்களின் சங்கங்களும் ஒருசில வழக்கறிஞர்களும் எழுத்து மூலமாக தங்களது கருத்துக்களையும் எதிர்ப்புக்களையும் தெரிவித்துள்ளனர். ஆனாலும் சில வழக்கறிஞர்களின் சங்கங்கள் தொடர்ந்து நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதால் நீதிமன்றப் பணிகள் பாதிக்கும் சூழல் இருப்பதால் வழக்கறிஞர்களின் சங்கங்களும் வழக்கறிஞர்களும் நீதிமன்றப் புறக்கணிப்பைத் தவிர்த்து நீதிமன்றப் பணிகளுக்கு திரும்ப வேண்டும்.

மேற்காணும் தகவலை சென்னை உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் திரு.தி.ரவீந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**